RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2441

OPEN ACCESS

# சிற்பி பாலசுப்பிரமணியம் கவிதைகளில் பெண்ணியம்

செ. தெய்வம் [அ, *]

[அ] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஊத்தங்கரை-636902, தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in the Poems of Balasubramanian

S. Deivam [a, *]

[a] PG & Research Department of Tamil, Sri Vidya Mandir College of Arts and Science, Uthangarai-636010, Tamil Nadu, India

* Corresponding Author: deivams@gmail.com

Received: 26-03-2024
Revised: 03-07-2024
Accepted: 08-07-2024
Published: 15-08-2024

Check for updates

## ABSTRACT

Through his poems Balasubramanian's he elucidates the complicated practice of dowry, the status of widows, the hardships faced by women in the society, the women who engage in prostitution due to poverty, and how women try to free themselves from the patriarchal society. It can be seen that the sexual violence that has been plaguing the society from ancient times is mostly mentioned in his poems. Women are the victims of sexual violence. The poems make us realize that the widowed women are also suffering from this situation and that women are trying to get rid of those troubles.

**Keywords:** Balasubramanian, Women, Violence, Society

## முன்னுரை

பெண்கள்படும் இன்னல்களையும், துயரங்களையும் வெளிக்கொணர இலக்கியத்தில் நாவல், சிறுகதை மற்றும் கவிதை போன்ற பல்வேறு தளங்களில் இயங்குகின்றனது. சிற்பி பாலசுப்பிரமணியம் தமது கவிதைப் படைப்புகளில் பெண்ணியம் சார்ந்த கவிதைகளை இயற்றியுள்ளார். சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்னற்ற சொல் தமிழுக்குப் புது வாரவாகும். 1889 ஆம் ஆண்டு வரை பெண்களின் உரிமைகளையும் அதனடிப்படையிலான போராட்ட உணர்வுகளையும் குறிப்பதற்கு ‘உமனிசம்’ என்ற சொல் பயன்படுததப்பட்டுள்ளது. 1890 ஆம் ஆண்டு முதல் இச்சசொல் ‘பெமினிசம்’ என்று மாற்றம் பெற்றது.-1‘பெமினிசம்’ என்ற சொல்லின் மூலச் சொல்லாக ‘பெமினா’ என்ற இலத்தீன் மொழிச் சொல் விளங்குகிறது. ‘பெமினா’ என்ற சொல்லுக்கு’, பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள என்பது பொருளாகும். 1894 ஆம் ஆண்டில் வெளிவந்த ஆக்ஸ்போர்டு அகராதி முதன்முதலில் இச்சொல்லைப் பயன்படுத்தியது.

பெண்ணியம் என்ற சொல் பெண் நிலைவாதம், பெண்ணுரிமை ஏற்பு, பெண்ணுரிமை, பெண் விடுதலை என்ற சொற்பொருள்களை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. 'பெண்மை' என்ற சொல் 'பெண்ணியம்' என்ற சொல்லின் பொருளோடு வேறுபட்டு விளங்குகிறது. பண்பாடு, மரபு இவற்றின் அடிப்படையில் பேணப்பட்டு வந்த பெண்ணின் இலக்கணங்களைக் குறிக்கவே 'பெண்மை' என்ற சொல் பயன்படுத்தபட்டு வருகிறது. பெண்ணியம் என்ற சொல்லோ, பெண்ணின் உரிமைகளையும் சிக்கல்களையும் முன்னிலைப்படுத்தும் அமைப்பின் பெயராக விளங்குகிறது.--2

## புதுக்கவிதையில் பெண்ணியம்

புதுக்கவிதையில் பெண்ணியம் பேசுகிற போக்குத் தமிழுக்கு மட்டும் உரியதன்று. அது புதுக்கவிதையைத் தோற்றுவித்த அமெரிக்க கவிஞர் வால்ட் விட்மனின் கவிதைகளிலேயே தொடங்கி விடுகிறது. ஒரு நகரம் எப்படி இருக்க வேண்டும் என்று சில விழுமியங்களை முன் வைக்கிறார் விட்மன், நல்ல நகரத்தின் நோக்கும் போக்கும் இப்படித்தான் திகழ வேண்டுமென்று வரையறை செய்கிறார். எவ்வளவு தான் சிறப்புகள் இருந்தாலும் பெண்ணுக்குச் சம உரிமை அளிக்கதாத ஒரு நகரம், நரகமாகத்தான் இருக்கும் என்பதுபோல் கவிதை அமைகிறது.

"எங்கு பெண்கள் ஆண்களுடன் சரிசமானமாக

ஊர்வலத்தில் பங்கு கொள்கிறார்களோ

எங்கு பொது அவைகளில் பெண்கள்

ஆண்களுடன் தனக்குரிய இடத்தைப்

பெறுகிறார்களோ,

அங்கு சிறந்த நகரம் இருக்கிறது." என்கிறார் விட்மன்.

பெண்கள் ஆண்களுடன் சரிசமானமாக ஊர்வலத்தில் பங்கு கொள்ள முடியாத நிலையும், பொது அவைகளில் ஆண்களுக்கு நிகரான இடம் பெண்களுக்கு இல்லாத அவலமும் நம் நாட்டில் மட்டுமன்று, அமெரிக்காவிலும் உண்டு என்பதை அறிகிறோம்-3

மனிதகுல வரலாற்றில் பெண்களுக்கு என்று தனியிடம் உண்டு ஆணின் வரலாறே பொதுவான வரலாறாக, வாழ்க்கையாகப் பார்க்கப்படுகிறது. பெண்களின் வரலாறுகள் மறைந்து போய்விட்டன. அல்லது மறைக்ககப்பட்டு விட்டன. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய புத்திலக்கிங்களில் பெரும் வீச்சுடன் வெளிவந்தது புதுக்கவிதை மட்டுமே. சங்க காலம் தொட்டு இன்றுவரை கவிதைத் துறையில் மட்டுமே பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத் தகுந்ததாக உள்ளது. ஔவை தொடங்கி இன்று புதியதாய் உள்ள பெண்கவி ஈறாகப் பெண்ணியம் பேசியுள்ளனர்.

## சிற்பி கவிதைகளில் -- பெண்ணியம்

புதுகவிதை வானத்தில் ஒரு நிலவாக இருட்டை வெளிச்சமாக்கக் கவிதைகள் படைத்தவர் கவிஞர் சிற்பி. புதுக் கவிதைக்குள் மண்ணையும் மனிதனையும் மறக்காமல் கவிதை படைக்கும் சிற்பியின் தனிச் சிறப்பு கதை கவிதை போன்ற படைப்புகள் ஆகும்.

1976 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கதைக் கவிதைகளைச் சிற்பி படைக்கத் தொடங்கினார். நவீனப் புதுகவிதையுலகில் கதைக் கவிதைகள் இவருக்குத் தனியிடத்தை ஏற்படுத்தித் தந்தன. சிற்பி அவர்கள் வானம்பாடி தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு சகாப்தம் என்றால் அது மிகையாகாது.

"நேரே நில் நிமிர்ந்து நில்

நெஞ்சில் பட்டதை வளமாய்ச் சொல்"

இதுதான் என்னுடைய கவிதைக் கோட்பாடு என்பார் சிற்பி. இன்னும் விளக்கமாகச் சொல்வதாயின் "இக்கால மனிதன் சிக்கல்களைப் புரிந்து கொள்வாற்கான இடையறாத முயற்சியே என் கவிதை. மனிதனையும் மண்ணுலக வாழ்க்கையையும் தொடாத எதுவும் இலக்கியமாக முடியாது" என்கிறார் சிற்பி அவர்கள் 4

பெண்களின் நடைமுறைச் சிக்கலான வரதட்சனை விதவை மகளிரின் நிலை தகவல் தொடர்பு சாதனங்களில் இடம் பெறும் மகளிரின் தோற்ற இழிநிலை போன்றவற்றை ஒரு சில கவிதைகளில் சுட்டியுள்ளார் சிற்பி. அறிவியல் முன்னேற்றத்தினால் பெண்களிடையே குழந்தை பெறுவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எதிர்காலவியல் சிந்தனையுடன் தம்முடைய ஆரம்பக் காலக் கவிதையிலேயே சித்தரித்துள்ளார் சிற்பி அவர்கள். சமுதாயத்தில் தொன்று தொட்டு இருந்து வரும் பாலியல் ரீதியானவன்முறைகளையே பெருமளவு தம்முடைய அணைத்துக் கவிதைத் தொகுப்புகளிலும் சாடியுள்ளர். பாலியல் ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர் இக்காலப் பெண்கள் மட்டுமல்ல. காப்பியப் பெண்களும் இந்நிலைகளுக்குள்ளாகி இன்னலுற்றதை பல இடங்களில் உள்ளக்குமுறலுடன் வெளியிட்டுள்ளார்.

## பெண்களும் ஒப்பனைகளும்

பெண்கள் பேண வேண்டிய அணிகலன்களாகப் பண்புகள் சிலவற்றைத் தீர்மானித்த சமூகம் அவர்கள் பூண வேண்டிய வெளி அலங்காரம் குறித்தும் சில மரபுகளைக் கொண்டிருந்தது.மேலும் ஆடை. ஆணிகலன்கள். அலங்கரித்தல் என்பவற்றைக் குடும்ப்ப பெண்ணுக்கு உரியவை. பரத்தமை தொழிலை மேற்கொள்ளும் மகளிருக்குரியவை என இருமாறுபட்ட தன்மைகளைக் கொண்டவனாகப் பிரித்தனர். குடும்பப் பெண்ணுக்கான ஒப்பனைகள் பிறரைக் கவர்ந்து இழுக்காத வகையில் இதற்கு நேர்மாறான ஒப்பனை முறை பரத்தமை மேற்கொள்வோருக்குமாக வரையறுக்கப்பட்டது. கைம் பெண்களுக்கு இவ்வலங்காரங்கள் முற்றிலுமாக மறுக்கப்பட்டன.

பெண் தன்னை ஒப்பனைப்படுத்திக் கொள்ளுதல் அவளுக்கு உரிமையுள்ள ஆண் பார்த்துப்பரவசப்பட மட்டுமே என்கிற கருத்தின் அடிப்படையில் பெண்களின் ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு விதமான வெளி அலங்கார முறைகள் வரையறுக்கப்பட்டன. இது பெண்ணின் அலங்காரம் ஆணின் விருப்பத்திற்கேற்ப ஆணாதிக்க உணர்வு கொண்ட சமூகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டது என்பதை உணர்த்துகிறது.

"உன் தாய்

உன்னை அலங்கரிப்பது

ஆபரணங்களால் அல்ல

என்

அவஸ்தைகளாலே தான்!

என் கண்கள் காணாத

உன் அலங்காரங்கள்

யாருக்காக? (மு.மேத்தா, கண்ணீர் பூக்கள், பக். 40)

என்ற இக்கவிதை ஒரு பெண் தன்னுடைய அலங்காரத்தினால் ஆனை உணர்வுச் சிக்கலுக்கு (அவஸ்தை) ஆட்படுத்துவதாகக் கூறுவதிலிருந்து பெண்ணின் ஒப்பனை ஆணின் நுகர்வுக்கென அமைக்கப்பட்ட புணைவு என்பதை ஒப்புக்கொள்கிறது.

அழகுபடுத்திக் கொள்ளுதல் என்பது பெண்களுக்கே உரிய தனிப்பட்ட மரபாக பண்பாடாகக் கருதப்பட்டு வருவதால் பெண்களின் சிந்தனை முடக்கப்படுகிறது என்பதைப் பெண்ணிலார் உணர்ந்தனர். பெண்களின் ஒப்பனை பண்பாட்டுத் தன்மை பெற்ற ஒரு கூறு என்பதனால் அது

அவர்களின் உள்ளங்களில் ஏற்படுத்தும் தாக்கத்தை யதார்த்தவியல் உத்திகளில் கவிஞர்கள் படைத்துக் காட்டுகின்றனர்.

"மங்கை சிங்காரம் முடிவதற்கு

வாரத்தின் நாட்கள் போதாதே!

தங்கைக் குலத்தீர்! தயங்கா தீர்!

மாதத்தை வாரம் ஆக்கிடுவோம்!" (சிற்பி பாலசுப்ரமணியம், சிரித்த முத்துக்கள், ப. 36)

என்ற சிற்பியின் கவிதை ஒப்பணைக்காக ஒரு மாதத்தைக் கூட எடுத்துக் கொள்ளுங்கள் என்பதன் மூலம் பலமணி நேர அலங்காரத்தைக் கண்டிக்கிறது. சிறுவயதில் அலங்கரித்துக் கொள்ளுவதைப் பெண்களுக்கான தவிர்க்க முடியாத கூறாகப் பண்பாடு உருவாக்கியுள்ளது-5

## பாலியல் தொழிலாளர்

பாலியல் தொழிலாளர்கள் சட்டத்தால் தடுக்கப்பட்டாலும் சமூக நெருக்கடிகள் இத்தகையோரை இத்தொழிலில் ஈடுபடுத்துவதை காணமுடிகிறது. வறுமை குடும்பத்தை காக்க வேண்டுமென்ற பொறுப்பு திரைப்பட ஆசை போன்றவை பரத்தமை ஏற்படக் காரணங்களாக அமைகின்றன என்பர்.

பெண்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினை பாலியல் தொழிலாளர்கள் என்ற பெயரில் இருப்பதற்க்கு பல்வேறு காரணங்கள் உள்ளதாக கவிஞர்கள் பாடுகின்றனர்.

"அபலைப் பெண்கள் வயிற்றுக்காக

விரித்து வைப்பார் பஞ்சனை

கொடுமை செய்ய உடன்படுவாள்

குடும்பம் காக்க ஒருத்தி!

படத் தொழிலில் ஆசை வைத்து

பலியானாள் ஒருத்;தி" (கண்ணதாசன், கண்ணதாசன் கவிதைகள் தொகுதி. -4. பக். 126 - 127)

என்னும் கண்ணதாசனின் கவிதைவரிகள் பெண்களின் மீதான பாலியல் சுரண்டலுக்கான காரணிகளை பட்டியலிட்டு காட்டுகிறது. மேலும் பெண்களி;ன் உண்மையான தேவைகளை நிறைவு செய்ய கைமாறாக அவர்களின் சுயகௌரவத்தையும் தன் மானத்தையும் விலையாக கேட்கும் முறையற்ற செயலை எந்த கூச்சமும் இன்றி செய்து கொண்டிருக்கும் ஆணாதிக்க சமூகத்தை வெளிச்சம் போட்டு காட்டுகிறது என்பதை இதன் மூலம் அறியலாம்.

வறுமைக் காரணமாகப் பெண்கள் பரத்தமையில் ஈடுபடுவதை கவிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். கால் வயிறு நிறம்ப முழு உடலையும் விற்க வேண்டிய நிலை இருப்பதை

"அம்மா நகைகளை விற்றாள்

அப்புறம் காய்கறி விற்றாள்

தலையில் சுமந்து விறகு விற்றாள்

பிறகு?

கற்பை விற்றாள்!

எங்களுக்கு

கால்வயிறு நிரம்பியது" (சிற்பி, மௌன மயக்கங்கள், பக். 25) -6.

## சீண்டப்படும் பெண்கள்

வறுமை நிலை காரணமாக கிழிந்த ஆடை உடுத்திய தொழிலாளப் பெண் ஒருத்தியின் இக்கட்டான நிலையை படம் பிடித்துக் காட்டும் ஒரு கவிதை

"பார்வைக் கணைகள் பட்டுக் கிழிந்த

ரவிக்கைக் கந்தல் -- அவள்

வேர்வை மணக்கும் மார்பின் சரிவை

மூடும் சேலைப் பந்தல்" (ஞானக் கூந்தன், கடற்கரையில் சில மரங்கள், ப.27)

என்று கூறுகிறது. இக்கவிதை வெளியில் வரும் உழைக்கும் பெண்களின் இடர்பாடுகளை எடுத்துக் கூறுகின்றது. கிழிந்த அல்லது குறைந்த ஆடையுடன் வரும் போது ஆணுக்கு ஏற்பாடாத சிக்கல் பெண்ணுக்கு ஏற்படுவதையும் சுட்டிக் காட்டுகிறது.

பெண்களை கவர்ச்சி கருதியே கடைகளில் பணிக்குச் சேர்த்துக் கொள்ளும் நிலை உள்ளது. பெண்களை விற்பனையாளர்களாக அமர்த்திக் கொண்டால் வாடிக்கையாளர்களை கவரக் கூடும் என்பதும் வணிக உத்தியாகப் பின்பற்றப்படுகிறது என்பதை,

"பொட்டப் புள்ளைச் சிவனேன்னு

கொடுத்த காசுக்கு உழைக்கும்

வர்ரவனுக்கும் கண்ணுக்குக் குளிர்ச்சியா

கூட்டம் குறையாது" (சிற்பி, சிரித்த முத்துக்கள், பக். 21) 7

என்ற கவிதை வரிகள் விளக்கிச் செல்கிறது.

## வேலையிடங்களில் பாதுகாப்பின்மை

வீட்டை விட்டு வெளியில் போகும் பெண்களுக்கு உள்ளப் பாதுகாப்பின்மை குறித்து பலக் கவிதைகள் கூறுகின்றன. வழியில் உள்ள மனங்கோணிய ஆண்களில் பலரும் பார்வைகளின் மூலமே பாலியல் வன்முறையை செலுத்துவதை அறிய முடிகிறது.

"வேலை தேடிக் கால் தேய

வெளியே நடக்கத் தலைப்பட்டால்

ஈயாய்க் கண்கள் பலமொய்க்க

என்னை உணர்ந்தேன் தெருமலமாய்" (பாலகுமாரன் விட்டில் பூச்சிகள், ப. 26)

இவ்வாறு பெண்கள் வெளியில் நடமாடுவதே சிக்கலாகிவிட்ட சூழ்நிலை நிலவுவதாக இக்கவிதை கூறுகிறது. ஆண்களின் அநாகரிகப் போக்கால் பெண்கள் சுதந்திரமாக நடமாடத் தடையேற்படுவதை இக்கவிதை எடுத்துக் கூறுகின்றது. நரகலில் ஈமொய்த்தல் என்ற படிமத்தின் மூலம் இத்தகைய பார்வைத் துச்சாதனர்களின் செயல் எவ்வளவு அருவருக்கத்தக்கது என்பதை விளக்குகிறார் கவிஞர்.

## வரதட்சனை

வரதட்சனை ஒழிப்புச் சட்டங்கள் இருக்கும் இன்றைய நாளில் வரதட்சனை நடைமுறையில் மக்களின் வாழ்க்கைத் தரங்களுக்கேற்ற வகையில் செயல் வடிவம் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. சிற்பி தன்னுடைய கவிதைகளில் வரதட்சனையைப் 'பொல்லாத காசா'கவும் 'தண்டனை'யாகவும் குறிப்பிடுகின்றார்.

பிஞ்சு வயதில் பிரபஞ்சமாக விளங்கும் தாய்க்கும் மகனுக்கும் இடையில் அவனது திருமணம் பெரிய மௌனத்திரையை ஏற்படுத்தியது. அதற்குக் காரணம் மருமகளாக வந்தவள் கொண்டு வந்த வரதட்சனைப் பற்றாக்குறை என்பதனை மிகவும் அழகாக நயம்பட

"அம்மா

நீ வைத்த பெயர்

மோகினிப் பிசாசு

நான் வைத்த பெயர்

பொல்லாத காசு" (சர்ப்பயாகம், மௌனத்திரை,ப. 64)

எனக் கூறுகிறார் சிற்பி. தாய் மருமகளைக் காரணமாக்கி 'மோகினிப் பிசாசு' எனக் கூறுமிடத்து உண்மையான காரணம் பொல்லாத காசே எனக் கூறி 'காசு' தான் பிரிவதற்குக் காரணம் என்பதனை உணர வைக்கின்றார் சிற்பி.

வரதட்சனை காரணமாகவும் வேலை கிடைக்காத காரணத்தினாலும் காதலர்கள் வாழ்க்கையில் இணைய முடியாமற் போவதனை

"அப்பா கேட்கிறார்

நோட்டு

அச்சிடும் யந்திரம்

அம்மா கேட்கிறாள்

கோலார் சுரங்கம்

நீ கேட்கிறாய்

நறுமண மாலை

நானும் யார் யாரையோ

கேட்கிறேன்

வேலை ----- வேலை ------ வேலை ---------

காதல்?"

அதுதான் தண்டிக்கப்பட்டிருக்கிறதே!" (சிற்பி, புனள்;னகை பூக்கும் பூனைகள். தண்டனை, பக். 89)

என்று காதலைத் தண்டனையாகச் சித்தரித்துள்ளார். மணமொத்த காதல் நிறைவேறவும் பொருள் தான் முக்கியம் என்பதனை நன்கு உணர்த்தியுள்ளார்.

ஒரு பெண்ணிற்குத் திருமணம் முடிவதற்குப் பொருளாதாரம் மிகவும் அவசியமானது என்பதை சூரிய நிழல் தொகுப்பில் 'மழை' (பக். 87) எனும் கவிதையிலும் வலியுறுத்தியுள்ளார். தாய்இ மகளின் திருமணம் நடைபெற முடியவில்லையே என ஏங்கிப் பாடுவதாக இக்கவிதை அமைந்துள்ளது. திருமணங்களில் முக்கிய இடத்தினைப் பெறுவது வரதட்சனையே ஆகும் என்பதனை நயம்பட பொருளாதாரச் சிக்கல் வடிவில் எடுத்து வைத்துள்ளார்.

## விதவையர்

விதவைப் பெண்களுக்கும் வாழ்க்கையில் விடிவு ஏற்பட வேண்டுமென்கிறார் சிற்பி. இதனை விடிவு எனும் கவிதையில்

"அது சந்தை

அவளோ மங்கலம் இழந்த மங்கை

சந்தை

வாரம் ஒரு முறை கூடும்

அவளுக்கு

நேரம் எப்போது மாறும்" (சிற்பி, ஒளிப்பறவை. விடிவு, ப.4)

என்று வினாவாக எழுப்பியுள்ளார்.

சந்தை கூடும் இடத்திற்கே வாரம் ஒருமுறை சந்தை கூடி விடிவு ஏற்படுகின்றது. வாழ்க்கையில் கணவனை இழந்த மங்கையர்க்கு விடிவு எப்போது கிட்டும். மாற்றம் எப்போது நிகழும் என்று கேட்கிறார். தன் ஆசாபாசங்களைப் பொய்யாகக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழும் பெண்இ மறைவிடத்தில் ஆணுடன் குலாவி மகிழ்ந்து வெளி வருவதனை புன்னகை பூக்கும் பூனைகள் கவிதைத் தொகுப்பில் "இது எங்கள் கிராமம்" எனும் கவிதையில் கிராமத்தில் நடைபெறும் நிகழ்ச்சியாகக் குறிப்பிட்டுள்ளார். மறைவான இடங்களில் விதவையர்களைப் பேணுவதைவிட அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முற்போக்கு சிந்தனையே 'விடிவி'னை உருவாக்கும் என்பதனை கவிஞர் சிற்பி தனது சிந்தனைகளை கவிதைகளின் மூலம் உணர்த்துகிறார்.8

## மாறுபட்ட சிந்தனை

அறிவியல் ஈடுபாட்டினால் இன்றைய மகளிர் விரும்பும் புதிய பண்பாட்டினை ஆரம்பக் காலக் கவிதையிலேயே சித்தரித்துள்ளார் சிற்பி.

"இன்னும் மணமாகா

ஏந்திழையாள் இங்கொருத்தி

கன்னிமையும் குலையாமல்

கைக் குழந்தை வேண்டுவளேல்

தவமிருந்து வாடாமல்

கடைத் தெருவில் தான் நுழைத்து

துவளுமிடை நோகாமல்

தொல்லையெதும் அடையாமல்

வேண்டும் நிறமும்

தலைமுடியும் விழியமைப்பும்

தூண்டும் அறிவும்

துலங்கும் குழந்தையினை

கருவடியில் விற்றிருப்பார்

காசிருந்தால் வாங்கிடலாம்

உருவ வடிவம் வரும் வரைக்கும்

உடலுக்குள் வளர்த்திடலாம்

கற்பென்ற பெரும் பழமைக்

கதைப்யெல்லாம் கடைத் தெருவில்

விற்பனைக்குக் கொண்டு வந்து

விஞ்ஞானம் ஓங்குது காண்" (சிற்பி, சிரித்த முத்துக்கள், எங்கெங்கு காணினும் சக்தியடா யுகத்தில், ப, 75)

என்ற கவிதையில் மேலை நாட்டு அறிவியல் தாக்கத்தினால் நம் நாட்டில் பல்வேறு துறைகள் வளர்ச்சி அடையும் போது ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமணக் கோட்பாட்டிலும் மாற்றத்தினை ஏற்படுத்தி கற்பினைத் தெருவிலும் வாங்கலாம் என்பது வரை வளர்ச்சியினை சுட்டியுள்ளார். திருமணம் என்ற பந்தம் தானே அடிமை நிலையைப் பெண்களுக்கு ஏற்படுத்துகின்றது. வாரிசு வேண்டும் அதனை எப்படியும் பெற்றுக் கொள்ளலாம் என இன்றைய சில பெண்களின் ஆசையினைக் கவிதையில் நிறைவேற்றியுள்ளார்.

## முடிவுரை

சிற்பியின் கவிதைகளின் மூலம் பெண்களின் நடைமுறைச் சிக்கலான வரதட்சணை, விதவை மகளிரின் நிலை, சமூகத்தில் பெண்கள்படும் இன்னல்கள், வறுமை காரணமாக விபச்சாரத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் ஆணாதிக்கச் சமூகத்திலிருந்து பெண்கள் விடுதலை பெற முயற்சிப்பது போன்றவற்றை தெளிவுபடுத்துகிறார். சமுதாயத்தில் தொன்று தொட்டு இருந்து வரும் பாலியல் ரீதியான வன்முறைகளையே பெருமளவு தமது கவிதைகளில் கூறியுள்ளதை அறிய முடிகிறது. பாலியல் ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர் இக்காலப் பெண்கள் மட்டுமல்ல. காப்பியப் பெண்களும் இந்நிலைக்கு உள்ளாகி இன்னலுற்றதையும் அந்த இன்னல்களிலிருந்து பெண்கள் விடுபட முனைந்திருப்பதையும் மேற்கண்ட கவிதைகள் நமக்கு உணர்த்துகிறது.

## References


விஜயலட்சுமி, ச. (2002) தமிழ் கவிதைகளில் பெண்ணுரிமை, இளவழகன் பதிப்பகம், சென்னை

துரை பட்டாபிராமன், விஜயகுமாரி, சே.சே. (2007) வாழ்வியல் நோக்கு. கலைஞன் பதிப்பகம், சென்னை, 278-279.

ஈஸ்வரி, கி. (2010) இலக்கிய மணிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

விஜயலட்சுமி, ச., மஞ்சுளா கனகராஜ், (2002) தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை, இளவழகன் பதிப்பகம், சென்னை, 176-178.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License